குற்றவியல் நீதித்துறை நடுவர், நீதிமன்றம், ஓமலூர்.
முன்னிலை: திருமதி.S.ஷர்மிளா, B.A.B.L.(Hons.), L.L.M.
குற்றவியல் நீதித்துறை நடுவர், ஓமலூர்.
சி.சி.எண்.95/2019

அ.சா.6

2024–ம் ஆண்டு நவம்பர் 14–ம் தேதி வியாழக்கிழமை அரசு தரப்பு சாட்சி 06–வது நபரின் வாக்குமூலம் (1969–ம் ஆண்டின் 54–வது விதியின் 9–வது பிரிவின் ஏற்பாட்டின் படி) திரு.ஆனந்தன் என்பவரின் ஆணையிட்டு உறுதிமொழி செய்விக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்து வைக்கப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | அன்புமணி | ஜாதி | |
| தந்தை பெயர் | மயில்சாமி | தொழில் | |
| கிராமம் | | சமயம் | |
| தாலுக்கா | | வயது | |

விசாரணை தொடங்கிய நேரம்: மதியம் 01.19 மணி,

Accused A1.Kaliya Moorthi and A2.Ramasami Present. Advocate Mr.A.Nagendiran present for A1 and for Advocate Mr.Kannan for A2. APP Mr.P.Suresh present.

**முதல் விசாரணை :**

**1.** நான் செலவடையில் குடியிருந்து, பழைய கார்களை வாங்கி விற்கும் தொழில் செய்து வருகிறேன். அ.சா.1 காவியா என்து சகோதரி. கடந்த 2018 ஆம் ஆண்டு ஒருநாள் அவரது நகை திருட்டு போய்விட்டதாக சொன்னார். காலையில் நான் அவர் வீட்டிற்கு சென்று பார்த்தபோது, போலிசார் வந்தார்கள். சம்பவம் நடந்தது குறித்து, விசாரணை செய்து, மாதிரி வரைபடம் வரைந்தார்கள். என்னிடம் சாட்சி கையெழுத்து கேட்டார்கள். நானும், ரமேஷ் என்பவரும் சாட்சி கையெழுத்து செய்தோம். என்னிடம் காட்டப்படும் பார்வை மகஜரில் உள்ள 1வது கையெழுத்து என்னுடையது. (**அந்த கையெழுத்து மட்டும அ.சா.ஆ,3 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**) போலிசார் விசாரித்தார்கள்.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை : இல்லை.**

2. எனது வீட்டிற்கும், அ.சா.1 வீட்டிற்கும், 5 – 6 கி.மீட்டர் தூரம் இருக்கும். சம்பவம் குறித்து காலை 08.30 மணிக்கு தகவல் கிடைத்தது. என்னை சாட்சியாக இருக்கச்சொல்லி போலிசார் சம்பவ இடத்திற்கு என்னை அழைத்தார்கள் என்றால்

சரியல்ல. சம்பவம் குறித்து தெரிந்து நான் சம்பவ இடத்திற்கு சென்றேன். நான், கையெழுத்திட்ட தாளில் என்ன எழுதியிருந்தது என்று எனக்கு தெரியாது என்றால் சரியல்ல.

3. போலிசார் சம்பவ இடத்திற்கு புகைப்பட கலைஞர்களையோ, கைரேகை நிபுணர்களையோ அழைத்து வரவில்லை. சம்பவத்தின்போது, அ.சா.1ன் வீடு கிழக்கு திசை நோக்கி இருந்தது. சம்பவம் பற்றி எனக்கு தெரியாது என்றாலும், நான் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல. பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் நான் சொன்ன தேதிகளில் தயார் செய்யப்படவில்லை என்றாலும், பின்னிட்டு தயார் செய்த ஆவணங்களில் நான் கையெழுத்து செய்துள்ளேன் என்றாலும் சரியல்ல.

**மறு விசாரணை : இல்லை**

விசாரணை முடிந்த நேரம்: மதியம் 01.28 மணி,

ஒம்/–ச.ஷர்மிளா.

குற்றவியல் நீதித்துறை நடுவர்,

ஓமலூர்.